செய்தி வெளியீடு எண்: 299 நாள்: 24.05.2011

**தமிழகத்தில் 01.06.2011-முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு 20-கிலோ இலவச அரிசி வழங்குவது குறித்த விரிவான ஆலோசனை கூட்டம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.**

இன்று ( 24.05.2011 ) சென்னையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழகத்தில் 01.06.2011-முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு 20-கிலோ இலவச அரிசி வழங்குவது குறித்த விரிவான ஆலோசனை கூட்டம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின்படி போலி குடும்ப அட்டைகளை கண்டறிந்து உடன் களைவது, அரிசி கடத்தலை தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது போன்ற அனைத்து பணிகளையும் அலுவலர்கள் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வோடு எந்தவித குறைபாடுகளும் இன்றி சிறப்பாக செயல்படவேண்டும் என கூறினார். மேலும், புதிய குடும்ப அட்டைகள் காலதாமதம் இன்றி வழங்க நடவடிக்கை எடுத்திடவும், எடைகுறைவு இல்லாமல் பொருட்கள் வழங்கிடவும், புதிய குடும்ப அட்டைகள் காலதாமதமின்றி அச்சடித்தல் போன்ற பணிகளை சிறப்பாக செயல்படுத்த வேண்டும் எனவும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து அலுவலர்களையும் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் அரசு முதன்மைச்செயலாளர், கூட்டுறவு,உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை(பொ) திரு.வி.கே.ஜெயக்கொடி,இ.ஆ.ப., அவர்கள், ஆணையர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு.கா.பாலச்சந்திரன்இ.ஆ.ப..அவர்கள், நிர்வாக இயக்குநர், நுகர்பொருள் வாணிபக்கழகம் திரு.எம.வீரசண்முகமணி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் உணவுத்துறை உயர் அலுவலர்கள்,மண்டல அலுவலர்கள், இணைப்பதிவாளர்கள்,மாவட்ட வழங்கல் அலுவலர்கள், உதவி ஆணையர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர்,செய்தி மக்கள் தொடர்புத்துறை,சென்னை-9.